பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**16 01 2026 FRIDAY 12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** சுயசார்பு இந்தியாவை உருவாக்க புத்தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்காற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2.** திருவள்ளுவர் தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**3.** தரமற்ற விதைகளை வழங்குவதை தடை செய்யும் வகையில், விதை சட்டத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ளதாக மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

**4.** ஈரான் பிரச்சினை தொடர்பாக ஐ நா பாதுகாப்பு கவுன்சிலின் அவசர கூட்டம் நடைபெற்றது.

**5.** இந்தியா ஓபன் பேட்மிண்டன் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் லக்ஷயா சென் இன்று தைவானின் **Chun Yi Lin** -ஐ எதிர்கொள்கிறார்.

. . இனி விரிவான செய்திகள் . .

<<<<<<<>>>>>>>>

சுயசார்பு இந்தியாவை உருவாக்க புத்தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்காற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தேசிய புத்தொழில் தினத்தையொட்டி சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இளம் தொழில் முனைவோர்களை ஆதரிப்பதில் அரசு உறுதிபூண்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

புத்தொழில் இந்தியா திட்டம் வெற்றிபெறுவதில் முதலீட்டாளர்கள், தொழில் கல்வி நிலையங்கள் ஆகியவற்றின் பங்களிப்பை அவர் பாராட்டியுள்ளார்.

மத்திய அரசின் சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம், விண்வெளி, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளிலும் புத்தொழில் விரிவாக்கத்திற்கான சூழல் ஏற்பட்டுள்ளதாக திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

நாட்டில் புத்தொழில் விரிவாக்கம் வரலாற்று சாதனையை படைத்துள்ளதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

பத்தாவது தேசிய புத்தொழில் தினத்தையொட்டி, புதுதில்லியில் இன்று நடைபெற்ற விழாவில் உரையாற்றிய அவர், இந்தியாவில் புத்தொழில் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவதாக கூறினார்.

இந்தியா தற்போது மூன்றாவது பெரிய புத்தொழில் மையமாக உருவெடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதில், இளையோரின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என்றும் திரு பியூஷ் கோயல் கூறினார்.

<<<<<<>>>>>>>

திருவள்ளுவர் தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்டோர் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

குடியரசு துணைத்தலைவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், திருக்குறள் தந்து வான்புகழ் பெற்ற திருவள்ளுவரின் திருநாளான இன்று அனைவருக்கும் வாழ்த்துகளை தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

அன்பின் வழியது உயிர்நிலை என கூறிய தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருநாளில் அவரைப் போற்றி வணங்குவதாக திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், திருவள்ளுவர் தினமான இன்று அவருக்கு மரியாதை செலுத்துவதாக கூறியுள்ளார்.

சிறப்பான அறிவாற்றலை வெளிப்படுத்தும் திருக்குறளை அனைவரும் படிக்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள செய்தியில், நம்முடைய சந்ததிகளுக்கு சேர்த்து வைத்திருக்கும் பொக்கிஷமான திருக்குறளை அதன் பொருள் உணர்ந்து கடைபிடிக்கும்படி வழிகாட்டுவோம் என்று கூறியுள்ளார்.

இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்தும் திருக்குறளின் வழி உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் வள்ளுவனின் புகழ் தழைத்தோங்கட்டும் என்று தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

தரமற்ற விதைகளை வழங்குவதை தடை செய்யும் வகையில், விதை சட்டத்தை வரும் நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் தாக்கல் செய்ய உள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன்மூலம் வேளாண் துறையின் சான்றிதழ் இல்லாத தரமற்ற விதைகளின் விற்பனையை தடை செய்ய முடியும் என்று கூறினார்.

மேலும், விவசாயிகளுக்கு உயர்தர விதைகள் கிடைக்க வழிவகை செய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

உயர்தர விதைகள் கிடைப்பது தொடர்பான அனைத்து விவரங்களும் எளிதாக விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறினார்.

<<<<<<<>>>>>>>

மகாராஷ்ட்ராவில் மும்பை, புனே, நாக்பூர் உட்பட 29 மாநகராட்சிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள் தற்போது எண்ணப்பட்டு வருகின்றன.

நேற்று நடைபெற்ற தேர்தலில் **Nanded**-ல் **61** சதவீத வாக்குகளும், **Latur**-ல் **60** சதவீத வாக்குகளும் பதிவாயின.

<<<<<<<>>>>>>>

இலங்கையில் **Ditwah** புயல் பாதிப்பு குறித்து ஆராய்வதற்காக சர்வதேச நிதியம் வரும் **22**-ஆம் தேதிமுதல், **28**-ஆம் தேதிவரை சிறப்புக்குழுவை அங்கு அனுப்ப உள்ளது.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய சர்வதேச நிதியத்தின் செய்தித் தொடர்பாளர் **Julie Kozack**, இந்த புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து கணக்கிடப்பட்டு, நிவாரண நிதி அளிப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இலங்கைக்கு அவசர நிதி வழங்க கடந்த மாதம் சர்வதேச நிதியம் ஒப்புதல் அளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

<<<<<<<>>>>>>>

தமிழகம் முழுவதும் மாட்டுப்பொங்கல் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நாளையொட்டி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள செய்தியில், உழவுக்கு உறுதுணையாய் விவசாய

பெருமக்களின் வாழ்வில் ஒரு அங்கமாய் திகழ்கின்ற மாடுகளுக்கு நன்றி செலுத்தும் வகையில் இத்தினம் கொண்டாடப்படுவதாக தெரிவித்துள்ளார்.

தங்களது மாடுகளுடன் இத்தினத்தை கொண்டாடும் அனைத்து விவசாய பெருமக்களுக்கும் மாட்டுப்பொங்கல் தின நல்வாழ்த்துகளை தெரிவிப்பதாக அவர் கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி, மதுரை மாவட்டம் பாலமேட்டில் ஜல்லிக்கட்டு போட்டி விறுவிறுப்பாக நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — ரகுராஜா — 40 Sec. )***

திருச்சி மாவட்டம் சூரியூரில் தொடங்கிய ஜல்லிக்கட்டுப் போட்டியில் **600** மாடுபிடி வீரர்களும், **850** காளைகளும் பங்கேற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — கதிரவன் - 41 Sec. )***

<<<<<<<>>>>>>>

ஈரான் பிரச்சினை தொடர்பாக ஐ நா பாதுகாப்பு கவுன்சிலின் அவசர கூட்டம் நடைபெற்றது.

ஈரான் அரசுக்கு எதிராக போராட்டம் நடத்துபவர்கள் மீது அந்நாட்டு பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்தியதையடுத்து, ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

பொருளாதார பாதிப்பு, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி அரசுக்கு எதிரான போராட்டம் வலுவடைந்து வருகிறது.

அமெரிக்காவின் வேண்டுகோளை ஏற்று ஐ நா பாதுகாப்பு கவுன்சிலின் அவசரக் கூட்டம் நடைபெற்றது.

இதனிடையே, ஈரான் பிரச்சினை உள்நாட்டு விவகாரம் என்று ரஷ்யா மற்றும் சீனா கூறியுள்ளன.

அங்கு நிலவும் சூழல் மூலம் ஈரான் வான்வழி விமான சேவைகளை தடை செய்த பின்னர், உலக நாடுகளின் வேண்டுகோளை ஏற்று இந்த தடையை நீக்கியது.

<<<<<<>>>>>>

பங்களாதேஷில் சிறுபான்மையினருக்கு எதிராக நடைபெறும் வன்முறைக்கு பிரிட்டன் கன்சர்வேட்டிவ் கட்சி உறுப்பினர் **Bob Blackman** கவலை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், பங்களாதேஷ் அரசியல் நிலைமை குறித்தும், சிறுபான்மையினரின் பாதுகாப்பு குறித்தும், தேர்தல் நடவடிக்கை குறித்தும் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<<>>>>>>>

கிரின்லாந்து பிரச்சினை தொடர்பாக அமெரிக்க துணை அதிபர் திரு **J D Vance,** டென்மார்க் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டுள்ளார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் **Karoline** இருதரப்பினரும் பேச்சுவார்த்தை தொடர்ந்து மேற்கொள்ள முடிவெடுத்துள்ளதாக கூறினார்.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்காக கிரின்லாந்தை அமெரிக்கா கையகப்படுத்துவது மிகவும் முக்கியமானது என்று

அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் கூறி வருவதை அவர் எடுத்துரைத்தார்.

<<<<<<<>>>>>>>

அமைதிக்கான நோபல் பரிசு வென்ற வெனிசுலா எதிர்க்கட்சித் தலைவர் **Maria Corina,** அமெரிக்க அதிபர் டோனல்டு ட்ரம்பை இன்று வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் சந்தித்தார்.

இந்த சந்திப்பு தமக்கு மகிழ்ச்சி அளித்ததாகவும், நோபல் பரிசை தமக்கு பரிசாக கொடுத்தது அவருடைய மாண்பை காண்பிக்கிறது என்றும் புகழாரம் சூட்டினார்.

வெனிசுலாவில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு அமெரிக்காவுடன் தொடர்ந்து செயல்பட விரும்புவதாக **Maria Corina** கூறினார்.

<<<<<<<>>>>>>>

இந்தியா ஓபன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் லக்ஷயா சென் இன்று தைவானின் **Chun Yi Lin** -ஐ எதிர்கொள்கிறார்.

புதுதில்லியில் இப்போட்டி, மாலை நடைபெறுகிறது.

<<<<<<<**END**>>>>>>>